# தமிழர் பண்பாட்டில் இசை

- கலாநிதி மீரா வில்லவராயர் -

உலகிலுள்ள பல்வேறு இனமக்களின் அருமை பெருமைகளையும் சீரையும் சிறப்பையும் அளவிட்டு எடைபோட்டு பார்ப்பதற்கு இரண்டு அளவைகளை வைத்திருக்கிறார்கள் அறிஞர் பெருமக்கள். ஒன்று நாகரிகம் (Civilization) மற்றொன்று பண்பாடு. நாகரிகம் என்பது மாந்தனது புறத்தோற்ற வளர்ச்சியின் செம்மையைக் குறிப்பது. பண்பாடு என்பது மாந்தனது அகவுணர்ச்சியின் சீர்மையைக் குறிப்பது. நாகரிக வளர்ச்சிக்குப் பண்பாடு துணை புரிவது போல் பண்பாட்டு வளர்ச்சிக்கு நாகரிகம் துணைபுரியும்.

தமிழ்மக்கள் தமது சமூக வரலாற்று வளர்ச்சியினூடாகத் தோற்றுவித்துக் கொண்ட சமூக நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள், மதநம்பிக்கைகள், ஆத்மீகக் கருத்துக்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், விஞ்ஞானம், தொழில்நுட்பம், உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, கலை, இலக்கியம் ஆகியவற்றினது தொகுதி யாக விளங்குவதே பண்பாடாகும். இப்பண் பாடு என்னும் பெருவட்டத்தினுள் மொழி, இலக்கியம், மதம் கலைகள் யாவும் பிரதான கூறுகளாக அமைகின்றன.[1]

இவற்றுள் கலை என்பது மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் பண்பட்ட அடையாளங்களாகும். கலை பற்றிய உணர்வு மனிதனிடம் இயற்கையாகவே காணப்படுகின்றது. இவ்வுணர்வே மனிதனுடைய வாழ்வை இன்பமயமான தாகவும் சுவை உடையதாகவும் ஆக்கு கின்றது. மனிதன் இக்கலை உணர்வை எந்தளவிற்கு வளர்த்துக் கொள்கின்றானோ அந்தளவிற்கு அனுபவிக்கவும் கற்றுக் கொள்கின்றான்.

நாகரிகம், பண்பாடு என்பன கலைக்களின் வாயிலாகவே பிறந்தன. இசையரங்குகளும், நாடக மேடைகளும், நடன நிகழ்வுகளும், இலக்கியச் சொற்பொழிவு களும், இல்லாத கலை நிகழ்ச்சிகளோ விழாக்களோ இல்லை என்று கூறுமளவிற்கு கலை மனித வாழ்க்கையோடு ஒன்றியதாகி விட்டது.

> 'கலை என்பது உணர்வின் வெளிப்பாடு
> அது உணர்வை வெளியிடுவதுடன் பிறர்க்கும்
> இவ்வுணர்வை ஊட்டும் பெருமையுடையது
> என்பார் டால்ஸ்டாய்.

கலைப்பொருள் படைக்கப்படுவதற்கு அடிப்படை உந்து சக்தியாக இருப்பவை எவை என்னும் வினா எழுகின்றது. சிறப்பு மிகு கலைப்படைப்புகள் தோன்றுவதற்கு தெய்வீக அகத்தெழுச்சி (Divine Inspiration) காரணமா அல்லது வெறும் பயிற்சி மட்டும் போதுமா என்னும் வினாவும் எழுகின்றது. தெய்வீக அகத்தெழுச்சி கலைப் படைப்பு களின் தோற்றத்திற்குக் காரணம் என்னும் கருத்தை பழந்தமிழ் இலக்கியத்தில் காணவில்லை. பயிற்சியின் மூலமே, கலைப் படைப்பு சிறப்பாக வெளிப்படுகின்றது என்னும் குறிப்பொருளை



Scanned by CamScanner

"கண்ணினும் செவியினும் திண்ணிதின்
உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங்
குரைத்தோ"

என்னும் தொல்காப்பிய நூற்பா எடுத்துரைக்கின்றது. கண், செவி முதலிய பொறிகளின் வாயிலாகப் பெறும் அறிவைக் கொண்டு ஆழ்ந்து சிந்தித்துத் தெளிவைப் பெறுதல் என்னும் திறப்பாட்டைக் கொண்ட மக்களே சிறந்த கலைப் படைப்பாளர்களாக விளங்க இயலும் என இந்நூற்பா கூறுகின்றது. இதே கருத்தினை யொட்டி ஒளவையார்,

"சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்"

என்று தெரிவித்துள்ளார். இவ்விரு சான்றுகளும் பயிற்சியும் பழக்கமுமே சிறந்த கலைப்படைப்பு முகிழ்ப்பதற்கு காரணம் என்னும் கருத்தைத் தெரிவிக்கின்றன.

பக்தி இலக்கிய காலமுதல் அருளாளர்கள் 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' தமிழோடு இசைப்பாடல் படைத்தனர். அருணகிரிநாதர்.

'ஆடும்பரி வேலணி சேவலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்'
(கந்தரனுபூதி - 21)

என்னும் பாடலில் இறைவன் திருவருளாலேயே பாட்டிசைக்க இயலும் என்றும் கருத்தினை முன்வைக்கின்றார். இவற்றிலிருந்து கலை முகிழ்ப்பிற்கு உந்துதல் சக்தியாக பயிற்சியும் பழக்கமும் அமைவதாகப் புலவர்கள் கருதினர் என்பதும் தெய்வீக அருளே உந்து சக்தியாக அமைகின்றது என்று அருளாளர்களும் சமயச் சார்புடைய புலவர்களும் போற்றினர் என்பதும் புலனாகின்றன.[2]

பண்டைக் காலத்தில் அழகுக் கலைகள் நான்காகக் கருதப்பட்டன. அவை சிற்பம், ஓவியம், இசை, காவியம் (இலக்கியம்) என்பன. ஆனால் இக்காலத்தில் மேற்கு நாட்டு சிந்தனையின் தாக்கத்தினால் அழகுக் கலைகளை ஆறாக வகைப்படுத்துகின்றோம். அவை இயல், இசை, நாடகம், சிற்பம், படிமம், கட்டடக்கலை என்பனவாகும். இவற்றை காட்சிக்கலை (Visual Arts) எனவும் கருத்துக் கலை (Intellectual Arts) எனவும் வகைப் படுத்துவர். நாடகம், ஓவியம், சிற்பம், படிமம், கட்டடக்கலை ஆகியவை காட்சிக் கலைகள். இசையும் இலக்கியமும் கருத்துக்கலைகள். இவற்றுள் இனிய ஒலி நயத்தால் இன்புறுத்தும் இசைக்கலையை 'கலைகளின் அரசி' என்றும் மேன்மையான கலை (Greatest of The Fine Arts) என்றும் போற்றுவர்.[3]

உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் வாழும் மக்களறிவில் தோன்றி விளக்கமடைந்து வளர்ந்துள்ள கலைகளுள் இசைக் கலை ஓர் ஒப்பற்ற கலையாகும். இசைக் கலை கருவியிசை, குரலிசை என்னும் பாகுபாட்டினூடே வளர்ந்து வருகின்ற கலை. ஒவ்வொரு நாட்டிலும் அவ்வந் நாட்டுப் பண்பிற்கு மட்டும் ஏற்றவாறு கலைகளும்



Scanned by CamScanner

நிகழ்வது இயல்பு. மனிதன் எச்சமயத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் எச்சமூகத்தைச் சேர்ந்தவனாயிருப்பினும் எம்மொழியைப் பேசுபவனாக இருப்பினும் அவனுக்கென் றொரு தனித்துவமான கலாசாரம், பண்பாடு இருப்பதைக் காண்கிறோம். தம் பண் பாட்டைப் பிரதிபலிக்கின்ற கலைகளுள் ஒன் றாகிய இசை தமிழரின் அன்றாட வாழ்விலும் சமய நிகழ்வுகளிலும் ஒன்றிணைந்து காணப்படுகின்றது.

சுவைப்போரின் அறிகைத்தேவைகள், மனவெழுச்சித் தேவைகள், உளவியல் தேவைகள், பண்பாட்டுத் தேவைகள் அனைத்தினையும் இசையின் தொழிற் பாட்டு பண்பு நிறைவேற்றுகின்றது.[4] மனித வாழ்வை ஆன்மீக நிலைக்கு உயர்த்திக் காட்டும் ஆற்றல் கலைக்கு உண்டு. ஆன்மீக வரலாற்றில் கலை ஒரு முக்கிய இடம் வகிக்கின்றது. எம்மதத்தை எடுத்துக் கொண்டாலும் தம் மதத்தை பரப்புவதற்குக் கலையையே ஒரு சாதனமாக பயன்படுத்திக் கொண்டனர். விசேடமாக இந்துமதச் சிந்தனைகளும் கலை உணர்வும் பிரிக்க முடியாத நிலையில் இரண்டறக் கலந்துள்ளன. இந்து மதம் மாத்திரமல்லாது தமிழ் நாட்டுச் சமயங்கள் வளர்த்த இசை பெருமைக்குரியது. சமண சமய இசை, இஸ்லாமியர் வளர்த்த தமிழ் இசை (மஸ்தான் சாஹிப் பாடல்கள்) கிறிஸ்தவ சமயம் வளர்த்த தமிழ் இசை (ஆபிரஹாம் பண்டிதர், வேதநாயகம் சாஸ்திரியார், வீரமாமுனிவர்) யாவும் தமிழிசையின் வளத்தினைப் பெருக்கியுள்ளது; தமிழரின் பண்பாட்டையும் பிரதிபலிக்கின்றது.

பழந்தமிழ் மக்கள் அந்நாள்
பறவைகள் விலங்கு, வண்டு
தழை, மூங்கில் இசைத்ததைத் தாம்
தழுவியே இசைத்தாலே
எழும் இசைத்தமிழே

என்பர் பாவேந்தர் பாரதிதாசன்.

உலக வரலாற்றினை நுணுகி ஆராய்ந்தால் இப்புவியில் தொல்பழங் காலத்திலேயே நுணுக்கமான இசையறிவு பெற்றுத் திகழ்ந்தவர்களாக தமிழர்கள் விளங்கினர் என்ற உண்மையை உணர முடியும். தொல்காப்பியர் காலத்திற்கு பல நூற்றாண்டுகட்கு முன்னரே தமிழர் கலை, இலக்கியம், பண்பாடு, நாகரிகம் ஆகிய அனைத்திலும் சிறந்து விளங்கினர்.

பண்டைத்தமிழகம் ஐந்து நிலங்களாக பாகுபடுத்தப்பட்டிருந்தது. இவ்வைந்து வகை நிலங்களிலும் வாழும் மக்கள், அவர்களின் தொழில், அவர்கள் தொழுத தெய்வம், வாசித்தபண், பறை முதலியவற்றை தொல் காப்பியத்திற்கு உரை எழுதிய இளம் பூரணனார் குறிப்பிட்டுள்ளார். இதனூடாக அந்தந்தப் பிரதேசத்துப் பண்பாடு அவர்கள் கையாண்ட வாத்தியக் கருவிகள் இசை யினூடாக வெளிப்படுவதைக் காணலாம்.

உதாரணமாகக் குறிஞ்சி நிலத்தை எடுத்துக் கொண்டால். இப்பகுதியில் வாழும் மக்கள் குறவர் என்றும் கானவர் என்றும் அழைக்கப்படுவர். இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த பிரதேசமுமாகும். இங்கு வாழும் மக்கள்

இசைத்த யாழ் - குறிஞ்சி யாழ்
இசைத்த பண் - குறிஞ்சிப் பண்
முழங்கிய பறை - வெறியாட்டுப் பறை,
தொண்டகப் பறை,

தொழுத தெய்வம் - சேயோன் என்னும் முருகவேள். குறிஞ்சிப் பண்ணிற்கு இணையான தற்கால இராகம் ஹரிகாம் போதி.

அவ்வாறே முல்லை நிலத்தை எடுத்துக் கொண்டால் இந்நில மக்கள் ஆயர், இடையர், கோவலர் என்று அழைக்கப்படுவர்.

இவர்கள் இசைத்த யாழ் - முல்லை யாழ்
இசைத்த பண் - சாதாரிப் பண்
இசைத்த பறை - ஏறுகோட் பறை
தெய்வம் - திருமால்[5]

சாதாரிப் பண்ணிற்கு இணையான தற்கால இராகம் பந்துவராளி.

தொல்காப்பியர் காலத்தில் எவ்வாறு ஒவ்வொரு வகையான நிலத்திற்கும் ஒவ்வொரு வகையான யாழும், பண்ணும், தோற்கருவியும் இருந்தன என்பதும் எவ்வாறு மக்கள் வாழ்வில் இசை ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது என்பதும் மேற் கண்டவற்றால் புலனாகின்றது. பண்டைத் தமிழருடைய வாழ்வின் ஒரு கூறாகவே இசைத்தமிழ் விளங்கிற்று.

குரலிசையோடு கருவியிசையையும் போற்றி வளர்த்த தமிழர் பொழுதிற்கும் பருவத்திற்கும் ஏற்ற முறையில் பயன்படுத்து வதற்குரிய பண், பண் வேறுபாடுகளையும் கண்டறிந்திருந்தனர்.

உ+ம் செவ்வழி யாழிசை நிறப
மாலையும் வந்ததன்று

என்ற சங்க இலக்கியமாகிய கலித் தொகை பாடற்றொடராலும்

"பாலை யாழொடு செவ்வழி பண்கொள
மாலை வானவர் வந்து வழிபடும்"

என்னும் அப்பர் சுவாமிகள் தேவாரத் தொடராலும் செவ்வழிப்பண் மாலையில் பாடுவது சிறப்பு எனத் தெரிகிறது. இப் பண்ணிற்குரிய சுவை மருட்கை என விபுலானந்த அடிகளார் கூறுகிறார்.[6] இவற்றி லிருந்து பண்டைக் காலத்திலிருந்தே தமிழர் பண்களை உரிய நேரத்தில் உரிய சுவை தெளிவுறப் பாடினர் என்பது புலனாகின்றது.

பக்தி இயக்க காலத்தில் (கி.பி 7ஆம், 8ஆம் நூற்றாண்டு) கலையின் பொருளே கடவுள் எனக் கருதும் போக்கு மேலோங்கியது. இறைவனே

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய்"

(சுந்தரர் தேவா - 527)

விளங்குவதாகப் போற்றினர். ஆழ்வார் களும் நாயன்மார்களும் இசையையும் ஆடற் கலையையும் போற்றிப் புரந்தனர்.

"பாடவல்லார் நெறி பாட அறிகிலேன்
ஆடவல்லார் நெறி ஆட அறிகிலேன்"
(திருமந் - 96)

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைப் பாடல் மறந்து
அறியேன்"
(தேவா 4:1:6)



Scanned by CamScanner

"பண்ணும் பதமேழும் பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்"
(சுந்-தேவா.294)

"பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்"
(திருவா 8.1:2)

"தூயோமாய் வந்துநாம் தூமலர்த் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க"
(திவ்ய - திருப்பாவை.16)

என்னும் ஆடல், பாடல் பற்றிய குறிப்புகள் தமிழர் சமய வழிபாட்டிலும் இசையும் ஆடற்கலையும் முக்கிய பங்கினை வகித்தன என்பதனை புலப்படுத்துகின்றன. பக்தியுணர் வின் பாற்படுத்தி கலைகளை தெய்வ மணங் கமழும் கவின் கலைகளாகப் புத்துருவம் பெறச் செய்த பெருமை பக்தி இயக்க அருளாளர்களையே சாரும். இவற்றால் மனிதனுடைய அன்றாட வாழ்க்கையில் தெய்வீக உணர்வு கலந்த இசை பயன் படுத்தப்பட்டதாக அறிகிறோம்.

சோழப்பெருவேந்தர் காலத்திலும் இசை இறைவனுக்காகவே என்னும் கொள்கை முனைப்பாக இருந்தாலும் பொதுவாழ்விலும் இசைக்கு அவர்கள் சிறப்பிடம் கொடுத்தி ருந்தனர் என்பதனை

"வயிரியர் மதுரகீதம் மங்கையர் அமுதகீதம்
செயிரியர் மகரயாழில் தேம்பிழி தெய்வகீதம்"
(கம்பரா. 705)

என்னும் பாடலால் அறியலாம். தமிழில் எல்லாச் சமய இலக்கியங்களும் இத்தமிழ்ப் பண்பில் குளித்து அவ்வவ் சமயத்துக்குத் தூய்மையும் உயர்வும் அளித்துள்ளன. புத்தர் தோத்திரமாயினும், அருகன் தோத்திர மாயினும், சைவ வைணவ தோத்திர மாயினும், கிறிஸ்துவ, இஸ்லாமிய தோத்திர மாயினும் இத்தமிழ்ப்பண்பு மிளிர்வதைக் காணலாம்.

பக்தி இயக்க காலமுதல் இந் நூற்றாண்டின் முற்பகுதிவரை இசைத்தமிழ் தெய்விக மணம் கமழ்வதாகவே இருந்து வந்தது. இன்று தமிழர் வாழ்வில் பண்பாட்டில் இசை இன்பம் பயப்பது என்னும் நோக்கில் சமய சார்பற்ற நிலையினை அடைந்து வருவதைக் காணலாம். இசையை பயன் பாட்டு இசை என்றும் அழகியல் இசை என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம். பயன்பாட்டு இசை மதச் சடங்குகள், சமூகச் சடங்குகள், வாழ்வியல் சடங்குகள் இவற்றுடன் நேரடித் தொடர் புடையவை. அழகியல் இசை உள இன்பத்தை ஏற்படுத்தக் கூடிய இசையாகும். தமிழர் வாழ்வில் பயன்பாட்டு இசை, அழகியல் இசை இவை இரண்டும் ஒன்றிணைந்து இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள அனைத்து நிகழ்வுகளிலும் இசை முக்கிய பங்கு வகிக்கின்றது. குழந்தை பிறந்தவுடனேயே மருத்துவிச்சி வாழ்த்துப் பாடுகிறாள். குழந்தை பிறந்தமை பெற் றோருக்கு மட்டும் மகிழ்ச்சி உண்டாக வில்லை. முழுச் சமூகத்திற்கும் அது மகிழ்ச்சி தரும் ஒரு நிகழ்ச்சியாகும் என



Scanned by CamScanner

'வயலும் புடையும் வாழ(வும்) வேண்டும்

அன்னமும் சுற்றமும் வாழ(வும்) வேண்டும்"

எனப் பாடப்படுகிறது. இன்பக் குழவியின் முகத்தினைப் பார்த்துத் தாய் பாடும் தாலாட்டுப் பாடல்களிலே இசையும் பொருளும் ஒத்து அமைவதுண்டு. மக்களின் அன்றாட வாழ்க்கைப் பின்னணியிலே தொழிற்பாடல்கள் அவர்களின் பண்பாட்டு விடயங்கள், பொருளாதார வாழ்க்கை முறைகள், சமுதாய அமைப்பு முறைகள் என்பன பற்றி ஆராய்வதற்கு துணையாகின்றன. அவ்வகையில் தொழில்புரியும்போது பாடப்படும் பாடல்கள் தமிழரின் பண்பாட்டைப் பிரதிபலிப்பனவாகவும் அமைகின்றன.

கூட்டுக் குடும்ப மரபில் முதியோர் கதை சொல்லும் வழக்கம் காணப்படுகிறது. உதாரணமாக வன்னிப்பகுதியில் நிலாக் கதை மரபு இடம்பெற்று வந்தது. நிலாக் காலத்தில் இரவில் பாடலுடன் இணைந்து கதை சொல்லும் மரபு அங்கு வளர்ச்சி யடைந்தது. கதை சொல்லுபவர் கதை மனவெழுச்சிகளை மேலெழச் செய்வதற்கு இசை தழுவிய பாடல்களைப் பயன் படுத்தினர். கிராமிய வழிபாட்டுடன் இணைந்து இசை தழுவிய கதை கூறல் மரபின் கலையாற்றலை உணர்ந்தோர். அதனைச் செப்பனிட்டு மெருகூட்டி "சங்கீத உபந்நியாசம்" என்ற வடிவமாக மேலுயர்த்தினர்.[7]

இசைக்கும் சடங்குகளுக்குமுள்ள தொடர்பு உலகளாவிய அகிலப் பொதுப் பண்பாகக் கருதப்படுகின்றது. இசையும் இசைதழுவிய அசைவுகளும் மனவெழுச்சித் தூண்டல்களுக்கு இடமளிப்பதால் சடங்குகளின் இலக்குகளுக்கு இசை பொருத்தமானதாக அமைகின்றது. இதனை அடிபொற்றியே வழிபாட்டிசை, பக்தி இசை, தேவாலய இசை என்பன வளர்ச்சி பெற்றன. தமிழ் மரபில் வளர்ச்சியுற்ற பண்ணிசை பக்தி மனவெழுச்சியுடன் நேரடித் தொடர்புடையது.[8]

சைவ ஆலயங்களில் நித்திய; நைமித்திய பூசைகளிலும் ஆலய உற்சவங்களிலும் இசை இன்றியமையாத இடத்தினை வகிக்கின்றது. சுவாமி புறப்பாட்டின் போது நாதஸ்வரத்தில் 'மல்லாரி' இசைக்கப் படுகிறது. நாதஸ்வரமும் தவிலும் தமிழருக்கேயுரிய மங்களகரமான வாத்தியக் கருவிகளாகும். இணுவில் கிராமத்தில் நாதஸ்வரக் கலைஞர் களை 'இசைமருகர்' என்று அழைக்கும் மரபு காணப்படுகிறது. 'திசையொடுங்கத் தமிழ் சுரக்கும் இசைமருகர்' என இணுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பிப் புலவர் குறிப்பிட்டுள்ளார். நாதஸ்வரம் தமிழகத்து புவியியல் மற்றும் பண்பாட்டுச் சூழலில் உருப்பெற்ற இசைக் கருவியாகும். தமிழரின் தெய்விக சடங்குகளுக்குரிய இசைக் கருவியாகவும் உலகியற் சடங்குகளுக்குரிய (திருமணம் போன்ற மங்கல நிகழ்வுகள்) இசைக் கருவியாகவும் நாதஸ்வரம் விளங்கு கின்றது.[9]

தமிழருடைய வாழ்வியல் சடங்குகளை எடுத்துக் கொண்டால் முக்கியமாக பூப்புனித நீராட்டு விழா, திருமண விழாக்களிலும் நடைபெறும் பல சடங்குகளில் பாடல்கள் இசையுடன் பாடப்படுகின்றன.

உதாரணம்: லாலி, ஊஞ்சல், நலங்கு, இன்றும் நம்மிடையே மாப்பிள்ளை வீட்டார்



Scanned by CamScanner

பெண் பார்க்கச் செல்லும்போது பெண்ணிற்குப் பாடத்தெரியுமா எனக் கேட்பதிலிருந்து இசை தமிழருடைய முக்கிய பண்பாட்டு அம்சம் என்பது புலனாகின்றது. இறப்பின் போதும் 'ஒப்பாரி' பாடி தம் மனத் துயரை வெளிப்படுத்துகின்றனர். மரணச் சடங்குகளிலும் தேவார, திருவாசகப் பாடல்களை ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பாடுகின்றனர்.

மனிதனை அன்பு மயமாக்குவது கலை. அவனுடைய உள்ளத்திலே அழகுணர்ச்சியைத் தோற்றுவிப்பது கலை. உள்ளத்தை தெய்வ நெறியில் ஈடுபடுத்துவது - செலுத்துவது கலை. தமிழருடைய சிந்தனையில் வாழ்க்கையின் குறிக்கோள் ஆன்மீக விடுதலையை - வீடு பேற்றை அடைவதாகும். கலையானது, அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் ஆகிய வற்றிற்கு உறுதுணையாக வாயிலாக அமை கிறது என்பதனை பொன்னைப் போல் போற்றியவர்கள் தமிழர்கள்.

*அடிக்குறிப்புகள்.*

1. ஏ.என்.கிருஷ்ணவேணி, தமிழர் பண்பாட்டில் ஈழத்து அறிஞர்களின் பங்களிப்பு ஓர் நோக்கு (கட்), பண்பாடு, ப-47.
2. சு.த.திருநாவுக்கரசு, தமிழரின் கலைக் கொள்கை (கட்) தமிழகக் கலைச்செல்வங்கள், பக். 27-28.
3. மேலது ப- 36
4. சபா ஜெயராசா, இசையும் சமூகமும், ப-15
5. து.ஆ.தனபாண்டியன், இசைத்தமிழ் வரலாறு பகுதி ஐ, ப-43.
6. ஞானா குலேந்திரன், தெய்வத் தமிழிசை, ப-18
7. சபா ஜெயராசா, மேலது, ப-43
8. மேலது ப- 63
9. மேலது ப-64-65

***துணை நூற்பட்டியல்***


சபா ஜெயராசா (2008), இசையும் சமூகமும், சேமமடு புத்தகசாலை, கொழும்பு 11.

காரை. சுந்தரம்பிள்ளை.செ (1994), இந்துநாகரிகத்தில் கலை, பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்.

தனபாண்டியன் து.ஆ. (1994), இசைத்தமிழ் வரலாறு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

துளசி இராமசாமி (ப.ஆ), (1990), தமிழகக் கலைச் செல்வங்கள், கவின் கலை அச்சகம், சென்னை.

ஞானா குலேந்திரன் (2008) தெய்வத் தமிழிசை, கொழும்பு சிவத்திருமன்றம், கொழும்பு.


***சஞ்சிகை***


பண்பாடு (2011), இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.


*****



Scanned by CamScanner